# நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

முன்னிலை : **திரு. G. யுவராஜ், M.A., M.L.,**

சிறப்பு சார்பு நீதிபதி,

நில ஆர்ஜித வழக்குகளுக்கான சிறப்பு சார்பு நீதிமன்றம்,

அரக்கோணம், ராணிப்பேட்டை மாவட்டம்.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 30–ஆம் நாள், திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண் 52/2026**

**(CNR No.TN-RP-07-000-060-2026)**

(அரக்கோணம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 52/2024)

P. ஜெயசந்திரன், வயது 79,
த/பெ.லேட்.முத்தியாள் செட்டி,
பெரிய தெரு, மிட்டாபேட் கிராமம் மற்றும் அஞ்சல்,
அரக்கோணம் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம். .. வாதி

எதிராக

S. தீனதயாளன், வயது 50, த/பெ.கே.சபாபதி ரெட்டி,
நடேசனார் தெரு, அன்னை நகர்,
நெமிலி மற்றும் அஞ்சல்,
நெமிலி தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம். .. பிரதிவாதி

தாவா தொகை ரூ.8,47,200/–ஐயும் மற்றும் தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை பிறப்பிக்கும் நாள் வரை அசல் தொகை ரூ.3,00,000/–க்கு ஆண்டுக்கு 24 சதவிகித வட்டியுடனும், அதற்கு பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 6 சதவிகித வட்டியுடனும் சேரும் தொகையையும், வழக்கு செலவுத் தொகையையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த உத்தரவிடக் கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

| | | |
|---|---|---|
| இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் | : | 27.03.2024 |
| வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 01.04.2024 |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.8,47,200/-. |
| செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | : | ரூ.25,416/- |
| நீதிமன்ற கட்டணச் சட்டம், பிரிவு | : | 22 |
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | : | 10.05.2016, 20.01.2019, 19.12.2021 06.03.2024, 08.03.2024. |
| வழக்குமூலம் ஏற்பட்ட இடம் | : | மிட்டாபேட்டை கிராமம், அரக்கோணம் வட்டம். |

இவ்வழக்கானது கடந்த 27.03.2024 அன்று அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 01.04.2024 அன்று அந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 52/2024-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பின்னர் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி, ராணிப்பேட்டை அவர்களின் Dis. No. 6789/2025, நாள் 19.12.2025 தேதியிட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடப்பட்டு, வழக்குக் கோப்புக்களை இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்தபிறகு, கடந்த 28.01.2026 அன்று இந்நீதிமன்ற அசல் வழக்கு எண் 52/2026-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ள இவ்வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 26.03.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். P. ராமமூர்த்தி மற்றும் G. ஆனந்தன் ஆகியோர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள். K.சரவணன்,V. ஹரிகிருஷ்ணன், V. சதீஷ் மற்றும் N. பிரபு குமார் ஆகியோர்கள் ஆஜராகியும், வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தையும், குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், வாதி

தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்பாணை</u>**

இறுதியாக, தாவா கடனுறுதி சீட்டின் பேரில் செலுத்த வேண்டிய ரூ.8,47,200/-ஐயும், பின் வட்டியையும், வழக்கு செலவுத் தொகையையும் செலுத்தக்கோரி வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது பகுதியாக அனுமதிக்கப்படுகின்றது. முடிவில், வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டின் பேரிலான அசல் தொகை ரூ.3,00,000/-ஐ கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்த 10.05.2016 தேதியிலிருந்து வழக்கு தாக்கல் செய்த நாள் வரை ஆண்டுக்கு 18 சதவிகித வட்டியுடனும், வழக்கிற்குப் பின்னிட்டு இன்றைய நாள் வரை ஆண்டுக்கு 12 சதவிகித வட்டியுடனும், தீர்ப்புக்குப் பின்னிட்டு தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை ஆண்டுக்கு 6 சதவிகித வட்டி மற்றும் வழக்கு செலவுத் தொகையையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகின்றது. மேலும், பிரதிவாதி செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில், வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3-ன் மூலம் செலுத்தியுள்ள ரூ.10,000/- + ரூ.10,000/-ஐ கழித்துக்கொண்டு, மீதமுள்ள தொகையை மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகின்றது.

2026-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 30-ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்ற முத்திரையுடன் என் கையெழுத்திடப்படுகிறது.

(Sd/-. G. Yuvaraj)

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்

## Cost Memo Details

| S. No. | Description | Plaintiff | Defendant |
|---|---|---|---|
| 1. | Stamp for Plaint<br>Stamp for Power<br>Stamp for Exhibits | 25,416.00<br>10.00 | Cost memo not filed by the Defendant |
| 2. | Pleader’s Fees<br>Junior Fees | 11,022.00<br>3,674.00 | |
| 3. | Service of Process | 25.00 | |
| 4. | Preparation of Process | 25.00 | |
| 5. | Cost of pre-Suit notice | 50.00 | |
| 6. | Cost of marking or getting copies of pleadings, applications & affidavits | 100.00 | |
| | **Total Costs Rs.** | **40,322.00** | |

(Sd/-. G. Yuvaraj)

**சிறப்பு சார்பு நீதிபதி,**

நில ஆர்ஜித வழக்குகளுக்கான

சிறப்பு சார்பு நீதிமன்றம், அரக்கோணம்

**சி.சா.நீ.ம., அரக்கோணம்**

**அ.வ. எண் 52/2026**

தீர்ப்பாணை

நாள் : 30.03.2026